**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆவணி திங்கள் 16 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 503/2025**

**அசல் வழக்கு எண். 436/2016**

சாமிநாதன் ..மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. கந்தசாமி
2. செல்வம்
3. பாலகிருஷ்ணன்
4. பெரியசாமி
5. விஜயகுமார்
6. P.C.பழனி
7. A. கிருஷ்ணமூர்த்தி
8. சுந்தரி
9. முத்துசேகர்
10. ராதிகா ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 28.08.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.V.கிரி அவர்கள் முன்னிலையாகியும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெகதீஸ் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சுந்தர்ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சதீஸ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராகவும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் உடல்நிலை சரியில்லாமல் டயாலிசிஸ் செய்வதற்காக மருத்துவமனைக்கு தொடர்ந்து செல்லவேண்டியுள்ளது. கடந்த 24.07.2025ம் தேதியன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது மனுதாரரின் உடல்நிலை மோசமான நிலையில் இருந்ததால் குறுக்கு விசாரணை பகுதியாக முடிக்கப்பட்டது. மருத்துவரின் அறிவுரையின்படி மனுதாரர் அடிக்கடி பயணம் செய்ய கூடாது, எனவே வீட்டில் மேலும் குறுக்குவிசாரணையை நீதிமன்ற ஆணையர் மூலம் பதிவு செய்ய வேண்டியது அவசியமானது ஒன்று என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>9ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8 முதல் 10 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் டயாலிசிஸ் செய்வதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரர் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யும்பட்சத்தில் இம்மனுவை நீதிமன்றம் தீர்மானிக்கலாம் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

5. **<u>தீர்வு</u>** :

**5.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரருக்கு தொடர்ந்து டயாலிசஸ் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**5.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களது வாதத்தில், மருத்துவ ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்யும்பட்சத்தில் மனுவை நீதிமன்றம் தீர்மானிக்கலாம் என்று வாதிட்டார்.

**5.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.4** மனுதாரர் தொடர்ந்து டயாலிசிஸ் செய்து வருவது ம.சா.ஆ.1 மனுதாரரின் மருத்துவ ஆவணம் மூலம் தெரியவருகிறது. மேலும் கடந்த 24.07.2025ம் தேதி மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வா.சா.1 ஆக குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அவரது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை பகுதியாக முடிக்கப்பட்டதால், அசல் வழக்கில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு இருதரப்பில் முழுமையான சாட்சி விசாரணையை முடித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, வழக்கறிஞர் திரு.M.கௌதம் M/s. No.4506/2021 (அலைபேசி எண். 9578139773) அவர்களை, இம்மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமித்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு, வரும் 10.09.2025 ம் தேதிக்குள் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணையை அவரது இல்லத்தில் பதிவு செய்து அறிக்கை மற்றும் சாட்சியத்தை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.10,000/- நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் முடிக்க போதிய ஒத்துழைப்பை தரவேண்டும். அதன்படி முடிக்க இயலாவிட்டால், நீதிமன்ற ஆணையர் குறுக்கு விசாரணையை முடித்து, நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் சாட்சியத்தை வரும் 15.09.2025 ம் தேதிக்குள் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.09.01 16:52:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | - | அபிராமி கிட்னி கேர் சென்டரின் மருத்துவ ஆவணம் | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**
**<u>மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.09.01 16:52:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.